பக்கங்கள் 17 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 03 ஞாயிற்றுக்கிழமை 15.02.2026 | அதிர்வு 198

## இலங்கைக்கு வருகின்றார் பிரிட்டன் துணைப் பிரதமர்



பிரிட்டன் துணைப் பிரதமர் டேவிட் லாமி குறுகிய கால விஜயம் மேற்கொண்டு நாளை மறுதினம் 17 ஆம் திகதி இலங்கைக்கு 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அநுர அரசின் சரிவுக்கு அமைச்சர்களின் சிறுபிள்ளைத்தனமே பிரதான காரணம்!

## முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடும் சாடல்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் அமைச்சரவையில் உள்ள பல அமைச்சர்கள் சிறுபிள்ளைத்தனமாகச் செயற்பட்டு வருகின்றனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:–

“அநுர அரசின் சரிவு ஆரம்பித்து விட்டது. இதற்கு அமைச்சர்களின் செயற்றிறன் இன்மையே பிரதான காரண 02▶

# நாட்டைச் சூறையாடியவர்களுக்கு எம் தூய்மையான வேலைத்திட்டம் சிறுபிள்ளைத்தனமாகவே தெரியும்!

## பிரசன்னவுக்கு அமைச்சர் ஹந்துன்நெத்தி தக்க பதிலடி

இந்த நாட்டைச் சூறையாடிய மொட்டுக் கட்சியினருக்கு எமது தூய்மையான வேலைத்திட்டம் சிறுபிள்ளைத்தனமாகவே தெரியும் என்று கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அநுர அரசின் அமைச்சர்கள் சிறுபிள்ளைத்தனமாகச் செயற்படுகின்றனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்த விமர்சனத்துக்குப் பதில் 05▶



# பிரிவினைவாதக் கோரிக்கைகளைத் தடுக்க மாகாண சபைத் தேர்தலை உடனே நடத்துக!

## கலாநிதி தயான் ஜயதிலக வலியுறுத்து

இலங்கையின் 78ஆவது சுதந்திர தினத்தின்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட “கரிநாள்” போராட்டங்கள், நாட்டில் மீண்டும் பிரிவினைவாதக் கோரிக்கைகள் தலைதூக்குவதற்கான அபாயத்தை வெளிப்படுத்தியுள்ளது என்று அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக எச்சரித்துள்ளார்.

கிளிநொச்சி, வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற இப்போராட்டங்களில் 02▶



# பின்பு தமக்கு வரக் கூடிய சிக்கல்களுக்கு கால்கோள் இடுகின்றார் வடக்கு ஆளுநர்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

இப்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாகப் பின்னொரு காலத்தில் ஏற்படவிருக்கும் விசாரணைகளில் ஆளுநரும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு துணை சென்றார் என்பதையும் அதனால் ஏற்படப்போகும் பாதிப்புகளும் அவரையே சாரக்கூடும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை எச்சரித்திருக்கின்றார் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன்.

"தமிழ்த் தேசியத்தின்மீது பற்றுள்ளவராக இருந்த ஆளுநர் நா.வேதநாயகன், அதற்கு எதிராகச் செயற்படலாமா?" என்ற தலைப்பில் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபையின் அதிகாரங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையளித்து மாகாண சபையைச் சிறுமைப்படுத்த வேண்டாம் என்றும் ஆளுநருக்கு அவர் எடுத்துரைத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

"கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த ஜே.வி.பி.ஃ என்.பி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாகாண சபைப் பொறுப்புகளை கையளித்துள்ளார் எனப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. கல்வி, விவசாயம், சுகாதாரம், உள்ளுராட்சி சபைகள் போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளுக்கு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமித்துள்ளார்



என அறியமுடிகின்றது.

மாகாண சபை அதிகாரங்களை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களே கையாளலாம் என்பதுடன் மாகாணசபை இயங்காத காலத்தில் அந்த அதிகாரங்களை ஆளுநர் முன்னெடுத்துச் செல்வார் என்பதைத்தான் மாகாணசபைச் சட்டம் கூறுகின்றது.

மாகாண சபைகள் சட்டத்தின் எந்த இடத்திலும் ஆளுநர் தனது அதிகாரங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கையளிக்கலாம் என்றோ அல்லது மாகாண சபை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாம் என்றோ கூறப்படவில்லை. சட்டம் அவ்வாறிருக்க, ஆளுநரானவர் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களை மேற்குறிப்பிட்ட விடயதானங்களுக்குப் பொறுப்பாக நியமிப்பதென்பது சட்டவிரோதமானதும் தவறானதுமான நடவடிக்கையாகும்.

வடக்கு மாகாணத்தில் வேறு தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் ஓரம்கட்டி ஆளும் கட்சி உறுப்பினர்களை இதற்குள் கொண்டுவந்து நுழைப்பதென்பது ஜே.வி.பி. தனது கட்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல மாகாண நிர்வாகத்தைத் தவறாகப் பயன்படுத்துகின்றது என்றே பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கண்ட இந்த விடயமானது வடக்கு மாகாணத்தில் மாத்திரம்தான் நடைபெறுவதாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

நீண்டகால நிர்வாக அனுபவங்களைக் கொண்ட ஆளுநர் வேதநாயகன், ஜே.வி.பியின் இந்தத் தவறான நடவடிக்கைகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர, அதனை ஏற்றுக்கொண்டு செயற்படுத்துவதென்பது பின்னொரு காலத்தில் ஏற்படவிருக்கும் விசாரணைகளில் ஆளுநர் அவர்களும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு துணைசென்றார் என்பதையும் அதனால் ஏற்படப்போகும் பாதிப்புகளும் அவரையே சாரக்கூடும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தைக் கையளிக்க வேண்டும் என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்வதை விடுத்து, அரசு செய்யும் பிழையான காரியங்களுக்கு முண்டுகொடுப்பதோ, செயற்படுத்துவதோ அறிவுபூர்வமான விடயமல்ல.

தமிழ்த் தேசிய உரிமை அரசியலில் ஈடுபாடு கொண்டவராக கடந்த காலங்களில் தன்னைக் காட்டிக்கொண்ட ஆளுநர் அண்மைக் காலத்தில் வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு விரோதமாக முன்னெடுக்கப்படும் விடயங்கள் எதனையும் கண்டுகொள்ளாமல் தவறான முடிவுகளின்பால் செல்ல வேண்டாம் என்பதை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவித்துக்கொள்கின்றது." - என்றுள்ளது.

## பிரிவினைவாதக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"வெளியக சுயநிர்ணய உரிமை" கோரும் பதாகைகள் ஏந்தப்பட்டிருந்தமை ஒரு தீவிரமான அரசியல் சமிக்ஞை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், வடக்கு - கிழக்கில் மக்கள் மத்தியில் காணப்படும் இத்தகைய தீவிரமான அரசியல் நிலைப் பாடு, நாடு மீண்டும் ஒரு பிரிவினைவாதப் போக்கினை நோக்கி நகர்வதைக் காண்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நீண்டகாலமாக முடங்கிக் கிடக்கும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதே சிறந்த தீர்வாகும் என்றும் அவர் முன்மொழிந்துள்ளார்.

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீண்டும் பிரிவினைவாதக் கோரிக்கைகளுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, முடங்கிக் கிடக்கும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்." - என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயக ரீதியான அதிகாரப் பகிர்வு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் மூலமே இத்தகைய தீவிரமான கோரிக்கைகளைத் தணிக்க முடியும் என்றும், இதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் கட்சி பேதமின்றி ஓரணியில் திரள வேண்டும் என்றும் கலாநிதி தயான் ஜயதிலக கோரிக்கை விடுத்துள்ளார்.

## அநுர..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகும். அமைச்சரவையில் உள்ள பெரும்பாலானோர் பொறுப்புடன் செயற் படாமல், சிறுபிள்ளைத்தனமான போக் கைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

நாட்டின் முக்கிய தீர்மானங்களை எடுக்கும் இடங்களில் இருப்பவர்கள் இவ்வாறான முதிர்ச்சியற்ற தன்மையுடன் செயற்படுவது நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும். அரசின் நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பலவீனங்கள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமைக்கு இந்த அமைச்சர்களின் அனுபவமின்மையே காரணம்." - என்றார்.

## இலங்கைக்கு..

வருகின்றார்.

17 ஆம் திகதி காலை கொழும்பு வரும் டேவிட் லாமி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் தங்கியிருக்கும் போது பிரிட்டன் துணைப் பிரதமர், தமிழ் அரசியல் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

பிரிட்டன் துணைப் பிரதமரைச் சந்திப்பதற்குத் தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐ.நா. பணியகத்தில் நடைபெறும் நிகழ்வில் குழந்தைகள் பராமரிப்புக்கான உலகளாவிய பரப்புரைக்கான சாசனம் குறித்த உடன்பாட்டிலும் டேவிட் லாமி கையெழுத்திடுவார்.

தனது குறுகிய கால விஜயத்தை நிறைவு செய்த பின்னர், டேவிட் லாமி 17 ஆம் திகதி மாலையே இலங்கையில் இருந்து புறப்படவுள்ளார்.

# மக்களின் நம்பிக்கையை வெல்வதே எமது இலக்கு!

## குறுகிய காலத்தில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் எதிரணி புலம்புகின்றது என லால் காந்த காட்டம்



தேசிய மக்கள் சக்தியின் அமைச்ச ரவை அமைச்சர்கள் குறித்து முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன் வைத்த விமர்சனங்கள் முற்றிலும் அடிப் படையற்றவை எனக் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி வித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப் ணபிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்:-

"பிரசன்ன ரணதுங்க கூறுவது போல் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் சிறுபிள்ளைத்தனமாகச் செயற்பட வில்லை. கடந்த காலங்களில் நாட்டைச் சீரழித்த ஊழல் மற்றும் முறையற்ற நிர்வாகத்தை மாற்றி, ஒரு புதிய அரசி யல் கலாசாரத்தை உருவாக்குவதையே எமது அமைச்சர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

பிரசன்ன ரணதுங்க போன்ற எதிர ணியினர், மக்கள் வழங்கிய புதிய அரசி யல் ஆணையைச் சகித்துக் கொள்ள முடியாமல் இவ்வாறான விரக்தி கலந்த கருத்துகளை முன்வைத்து வருகின் றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தலைமையிலான தற்போதைய அமைச்சரவை மிகவும் அர்ப்பணிப்புடன், மிகக் குறுகிய காலத்துக்குள் பல ஆக்க பூர்வமான மாற்றங்களைச் செய் துள்ளது.

அமைச்சர்களின் செயற்றிறன் இன்மையால் அரசு வீழ்ச்சியடையும் என்பது எதிரணியினரின் வெறும் பகற்கனவு மாத்திரமே. மக்களின் நம் பிக்கையை மென்மேலும் வென்றெடுக் கும் வகையில் எமது திட்டங்களை நாங்கள் உறுதியுடன் முன்னெடுத்து வருகின்றோம்." - என்றார்.






# மோட்டார் சைக்கிள் மோதி 9 வயது சிறுவன் உயிரிழப்பு!

மாத்தறை மாவட்டம், கம்புறுபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரி ழந்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

நேற்று மாலை கம்புறுபிட்டிய பகுதி யில் சிறுவன் ஒருவன் தனது தந்தை யுடன் வீதியில் நடந்து சென்று கொண் டிருந்தபோது, பின்னால் அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் கள் மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில் மேற்படி சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், அவருடன் சென்ற தந்தை சிறு காயங் களுடன் உயிர் தப்பியுள்ளார்.

சம்பவத்தில் கம்புறுபிட்டிய பிரதேசத் தைச் சேர்ந்த 9 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளின் அதீத வேகமே இந்த விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள் ளது.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் செலுத்துநர் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.

# ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச்சூட்டில் மன்னார் இளைஞரே உயிரிழப்பு!

## வெளிவரும் அதிர்ச்சித் தகவல்கள்

கொழும்பு – ஜிந்துப்பிட்டி பகுதியில் நேற்று இரவு இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த இளைஞர், மன்னாரைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த இளைஞர் மன்னார் மாவட்டம், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பண்டாரவெளி – வெள்ளிமலை பகுதியை சேர்ந்த 20 வயதுடைய முஜாஹித் முஹம்மது சஹ்ரின் எனத் தெரியவந்துள்ளது.

இந்த இளைஞர் கொழும்பில் தொழில் செய்து வருகின்றார் என்றும், நேற்று இரவு தலைமுடி வெட்ட சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குச் சென்றபோது துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் நேற்று இரவு சிகை அலங்கார நிலையம் ஒன்றுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஐவர் காயமடைந்து சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்ககப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், படுகாயமடைந்த ஏனையவர்கள் கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



ரி – 56 ரக துப்பாக்கி இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், பாதாள உலகக் குழுக்களுக்களுக்கு இடையிலான மோதல் காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் துப்பாக்கிச்சூடு தொடர்பான சி.சி.ரி.வி. காணொளி வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

### காதலனுடன் ஏற்பட்ட முரண்பாட்டால்

# காதலர் தினத்தில் தூக்கிட்டு உயிரை மாய்த்த இளம் யுவதி

கொழும்பு, கடுவெலை பிரதேசத்தில் 22 வயதுடைய யுவதி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:–

கடுவெலை பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலேயே மேற்படி யுவதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காதலர் தினமான நேற்று, தனது



காதலனுடன் ஏற்பட்ட மனக்கசப்பு மற்றும் முரண்பாடு காரணமாக அவர் மனமுடைந்த நிலையில் காணப்பட்டார் என்று தெரியவருகின்றது.

இந்த மன உளைச்சல் காரணமாகவே அவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்திருக்கலாம் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வீதியோரம் நடந்து சென்ற வயோதிபர் டிப்பர் வாகனம் மோதி பரிதாபச் சாவு!

கம்பஹா மாவட்டம், பியகமை பிரதேசத்தில் இடம்பெற்ற கோர விபத்தில் வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:–

நேற்று இரவு பியகமை பகுதியில் வீதியின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த வயோதிபர் மீது, பின்னால் வந்த டிப்பர் ரக வாகனம் ஒன்று மோதியுள்ளது.

அதிவேகமாக வந்த டிப்பர் வாகனம்



சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மோதியதே இந்த விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் பியகமை பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பியகமை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், கைது செய்யப்பட்ட சாரதியை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## நாட்டைச்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும்போதே அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“கடந்த காலங்களில் நாட்டைப் பொருளாதார ரீதியாகப் படுகுழியில் தள்ளியவர்களுக்கும், ஊழல் நிறைந்த அரசியல் கலாசாரத்தில் ஊறியவர்களுக்கும் எமது புதிய மற்றும் வெளிப்படையான வேலைத் திட்டங்கள் சிறுபிள்ளைத்தனமாகத் தெரிவதில் வியப்பில்லை. நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானமும் மக்களின் நலனை நோக்கியதே தவிர, தனிநபர் இலாபங்களுக்காக அல்ல.

தற்போதைய அமைச்சர்கள் எவ்வித வரப்பிரசாதங்களையும் எதிர்பாராது, நாட்டின் கைத்தொழில் மற்றும் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப இரவு பகலாக உழைத்து வருகின்றனர். பிரசன்ன ரணதுங்க போன்றவர்கள் குறை கூறுவதை விடுத்து, ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினால் நாடு முன்னேறும்.

மொட்டுக் கட்சியினர் மீண்டும் அதிகாரத்துக்கும் வரும் நோக்குடன் இவ்வாறான முதிர்ச்சியற்ற கருத்துக்களை முன்வைக்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறுகின்றமையை நாட்டு மக்கள் நம்பமாட்டார்கள். ஏனெனில் நாட்டு மக்கள் முட்டாள்கள் அல்லர்.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இங்கு படைக் குவிப்பு ஏன்?

புதிய ஆண்டுப் பிறப்புடன் சற்று தணிந்திருந்த தென்னிலங்கைத் துப்பாக்கிச் சூடுகள் இப்போது மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன.

போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கும், போதைப் பொருள் வர்த்தகர்களுக்கும், பாதாள உலகக் குழுவினருக்கும் எதிரான கைது நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தி அரசு பெரும் எடுப்பில் தீவிரப்படுத்தி இருப்பதாகக் கூறப்பட்ட பின்புலத்தில் தென்னிலங்கையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு வன்முறை சற்றுத் தணிந்திருந்தது.

ஆனால் பெப்ரவரி மாதப் பிறப்புடன் விவகாரம் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

எவ்வளவுதான் அரசும் பொலிஸாரும் படையினரும் பாதாள உலகக் குழுவினருக்கு எதிராகத் தீவிர நடவடிக்கைகளை எடுத்தாலும், அவர்கள் வெட்ட வெட்ட தழைக்கும் களைகள் போல புதுப்புது உருவெடுத்து, தீவிரமாக வெளிப்பட்டு வருகிறார்கள் என்பதுதான் உண்மை நிலைவரம்.

பல்லாயிரக்கணக்கான இயந்திரத் துப்பாக்கிகளும் கைத்துப்பாக்கிகளும் பாதாள உலகம் குழுவினரிடம் இன்னும் தாராளமாக புழக்கத்தில் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

அரசுக்கும் படைகளுக்கும் பொலிஸாருக்கும் சவால் விடத்தக்க வகையில் பாதாள உலகக் குழு மிகுந்த உயிர்ப்புடன் நாட்டில் செயற்பட்டு வருகின்றது என்பது கண்கூடு.

என்னதான் பாதாள உலகக் குழுக்களின் தாதாக்கள் வெளிநாட்டில் மறைந்து இருந்தாலும் அவர்களை அங்கிருந்து இழுத்து வந்து சட்டத்தின் முன் நிறுத்துகின்றோம் என்று அரசு தரப்பு மார் தட்டிக் கொண்டாலும், பாதாள உலகக் குழுவினரின் கைவரிசை தனித்துவமாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

பாதாள உலகக் குழுக்களின் இந்தத் துப்பாக்கிக் கலாசாரம் தென்னிலங்கையில்தான் நிலை பெற்றுள்ளது. தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் அல்ல.

ஒரு காலத்தில் தமிழர் தாயகத்தில் - இலங்கையின் வடக்கு, கிழக்கில் - மோசமான யுத்தம் நடைபெற்றது என்பது உண்மைதான். ஆனால் இப்போது ஆயுதங்களைத் தாங்கி அச்சுறுத்தலை விடுத்து வருபவர்கள் தமிழர்கள் அல்லர். தென்னிலங்கையை மையமாகக் கொண்ட பாதாள உலகக் குழுக்களும் மாபியா கும்பலும்தான்.

ஆக, சட்டத்தை மீறி, சட்டத்துக்குச் சவால்விடும் அளவில் செயற்படுகின்ற பாதாள உலகக் குழுவினரை அடியோடு அடக்கி, அவர்களின் கொட்டத்தை வாலோடு ஒட்ட நறுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசு அதற்குப் பதிலாக தன்னிடம் உள்ள பாதுகாப்பு வலிமையான - இராணுவத்தினரின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினரை - இந்த பாதாள உலகக் குழுவினரின் அச்சுறுத்தல் இல்லாத தமிழர் தாயகத்தில் - முழுமையாக நிலை நிறுத்தி வைத்து அழகு பார்த்துக் கொண்டிருக்கின்றது.

தெற்கில் தலை விரித்தாடும் பாதாள உலகக் குழுக்களின் வன்முறையை அடக்குவதற்கு தன்னுடைய பாதுகாப்பு திறமையின் வலிமையை முழுமையாக ஏவி விட வேண்டிய சிங்கள - பௌத்த அரசு, தமிழர் தாயகத்தில் தமிழர்கள் மீதான தனது அடக்குமுறையை நிலை நிறுத்துவதற்காக மட்டுமே தன்னுடைய படைவலிமையை அங்கு இராணுவ ஆக்கிரமிப்பாக நிலை கொள்ள வைத்திருக்கின்றது.

இந்தப் பேரினவாத வெறித்தனத்தைக் களைந்து, நீதி - நியாயத்துடன் செயல்பட அது முன் வந்தால் மட்டுமே, தென்னிலங்கைப் பாதாள உலகக் குழுக்களின் கொட்டத்தை அடக்கக் கூடியதாக இருக்கும்.







# தும்பங்கேணியில் வீடொன்று மின் ஒழுக்கில் எரிந்து நாசம்!

**(மட்டக்களப்பு நிருபர்)**

தும்பங்கேணியில் வீடொன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக வீடு மற்றும் பொருள்கள் பகுதியவில் எரிந்து நாசமாகின. வீட்டில் இருந்தோர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவு பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட தும்பங்கேணி பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

சம்பவ இடத்துக்குப் போரதீவுப் பற்று பிரதேச சபைத் தவிசாளர் விமலநாதன் மதிமேனன், உப தவிசாளர் கயசீலன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் அனோஜன் ஆகியோர் சென்று நிலமையைப் பார்வையிட்டிருந்தனர்.

அந்தப் பிரதேசத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இவ்வாறு வீடொன்று மின் கசிவால் தீப்பற்றி எரிந்தது என்று பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பிரதேசத்தில் அடிக்கடி மின் கசிவு ஏற்படுகின்றமை தொடர்பில் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என இதன் போது பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நீண்ட இடைவெளிக்கு பின்னர் நேற்று சிவனொளிபாத மலையில் நெருக்கடி

**(மஸ்கெலியா நிருபர்)**

நீண்ட இடைவெளிக்கு பின்னர் நேற்று சிவனொளி பாத மலைக்குப் பெருமளவில் யாத்திரிகர்கள் சென்றுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் பௌர்ணமி தினத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிவனொளி பாத மலை பருவகாலம் யாத்திரிகர்கள் மிக மிக சொற்ப அளவில் வருகை தந்ததால் நல்லதண்ணி நகரில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் மலை உச்சிக்கு செல்லும் சாலையோர வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தனர்.

நேற்று சனிக்கிழமை இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஹட்டன் நல்லதண்ணி வழியாக சிவனொளிபாத மலைக்கு வருகை தந்துள்ளனர் என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதாலும் பாடசாலை விடுமுறை என்பதாலும் இன்றும் அதிகளவு யாத்திரிகர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



ரயில் சேவைகள் இல்லாத காரணத்தால் யாத்திரிகர்கள் வருகையில் வீழ்ச்சி கண்டுள்ளது. அத்துடன் ஹட்டன் அரச பஸ் நிலையம் முறையாக அரச பஸ்களைச் சேவையில் ஈடு படுத்தவில்லை என்று முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட ஹட்டன் அரச பேருந்து நிலைய அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி அரச பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் விசேட கூட்டம்

(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் உதவி மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் சாரண தலைவர்களுக்கான விசேட கூட்டம் அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் ஜுனியர் கல்லூரியில் நடைபெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ.உதுமாலெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலயக் கல்வி பணிமனையின் முன்னாள் பணிப்பாளரும், மாவட்ட சாணர் பயிற்சிக் குழு தலைவருமான யூ. எல். எம். ஹாசிம், சங்கத்தின் பிரதித் தலைவர் கலீலூர் ர/ஹமான், ஊடகத்துக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளர், ஊடகவியலாளர் எம்.எப்.றிபாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அச்சிடப்பட்ட நாற்குறிப்பேடு மாவட்ட ஆணையாளரால் வழங்கி வைக்கப்பட்டது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறவுள்ள சாரணர் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# சாரணர்களுக்கான நடை பயணப் பயிற்சி

(எம்.எம்.நௌபீக்)

இலங்கை சாரணர் சங்கம் மற்றும் திருகோணமலை மாவட்டக் கிளை ஆகியவற்றின் ஏற்பாட்டில் சாரணர்களுக்கான நடை பயணம் மற்றும் வரைபட அடையாளமிடல் பயிற்சி திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆரபப் பிரிவு வளாகத்தில் மாவட்ட சாரண ஆணையாளர் சி. சசிகுமாரின் வழிநடத்தலில் உதவி மாவட்ட ஆணையாளர் ந.அசோக்குமாரின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

கொழும்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் உதவி ஆணையாளர் (திரிசாரணர்) நபீஸ் அஹமட், பயிற்சிக்குழு உறுப்பினர் என்.எம்.ஹாமீன் ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

இந்தப் பயிற்சி நெறியில் ஏழு சாரணர் குழுக்களைச் சேர்ந்த 43 சாரணர்கள் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.







# அம்பாறை பிரதிப் பொலிஸ்மா அதிபர் சமூக நல்லிணக்க நிகழ்வில் பங்கேற்பு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்ல, இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாசல் ஏற்பாடு செய்த சமூக நல்லிணக்க நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கில் முதன்முறையாக இறக்காமம் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார்.

இந்த நிகழ்வில் பொத்துவில் மற்றும் அக்கரைப்பற்றுபிராந்தியஉதவிபொலிஸ் அத்தியட்சகர் ஏ. தயாரத்தன, இறக்காமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.பி.பி. பிரியந்த உள்ளிட்ட பல பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது பிரதேசத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்துவது தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. குறிப்பாக, போக்குவரத்து ஒழுங்கை வலுப்படுத்துதல், சுற்றுப்புறப் பாதுகாப்பை மேம்படுத்துதல், பணமோசடியில் இருந்து மக்களை பாதுகாத்தல், போதைப் பொருள் ஒழிப்பை தீவிரப்படுத்துதல் மற்றும் சமூக நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்த்தல் போன்ற முக்கிய விடயங்கள் குறித்து அதிகாரிகளும் சமூக பிரதிநிதிகளும் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பிற பள்ளிவாசல் தலைவர்கள், இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.எல். முஸினி, உதவி தவிசாளர் கே.எல். சமீம், பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில், பெரிய ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் பிரதி பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்லவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.










# "போதையால் மூழ்கிய சமூகத்தை மீட்போம்" நூல் வெளியீட்டு நிகழ்வு மருதமுனையில்

(நூருல் ஹுதா உமர்)

மருதமுனையைச் சேர்ந்த ஊடகவியலாளரும் சமூகப்பணியாளருமான எழுத்தாளர் ஏ.ஆர். அஹமட் நபாயிஸின் 7 ஆவது நூலான "போதையால் மூழ்கிய சமூகத்தை மீட்போம்" என்னும் நூல் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் வெளியிடப்பட்டது.

மருதமுனை ஆவணக்காப்பக வெளியீடாக வெளிவந்துள்ள இந்த நூல், உலகளவில் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள போதைப் பொருள் மற்றும் அபாயகர மருந்து பயன்பாட்டின் தாக்கங்களை ஆய்வு செய்து, அதிலிருந்து சமூகத்தை மீட்டெடுக்க வேண்டிய அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைக்கிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு முயற்சிகள், சமூக, மத, கல்வி அமைப்புகளின் பங்கு தொடர்பில் 20 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் ஆழமாக விளக்கப்பட்டுள்ளன. இது சமூக விழிப்புணர்வை உருவாக்கும் முக்கியமான ஆக்கமாகக் கருதப்படுகிறது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம். ஜீ.பி. முஹம்மட் ரஷாட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இலங்கை நிர்வாக சேவையின் முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகமும், வர்த்தக



வாணிப அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருமான எம்.எம். நௌபல் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

கௌரவ அதிதிகளாக பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ. கஜேந்திரன், ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் ஜம்மியத்துல் உலமா சபை மருதமுனை கிளைத்தலைவர்அஷ்-ஷெய்க்எம்.எஸ்.ஏ.அன்ஸார் மௌலானா (நழிமி), சம்மாந்துறை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச். நைறோஸ்கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட அதிதிகளாக ஓய்வு பெற்ற சிரேஷ்ட சமூர்த்தி முகாமையாளர் ஏ.ஆர். சாலிஹ், அல்-மீஸான் பௌண்டஷன் தவிசாளர் யூ.எல்.என். ஹுதா, கல்முனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எப். ஹினாபா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூலின் முதற்பிரதியை சிரேஷ்ட சட்டத்தரணியும் பதில் நீதிபதியுமான ஏ.எம். பதுறுதீன் பெற்றுக்கொண்டார். மேலும், நூலின் சமர்ப்பண பிரதியை பொலிஸ் பரிசோதகர் மர்ஹூம் இஸட். ஏ.எச். ரஹ்மானின் சகோதரி இஸட். ஏ.நஜ்முனிசா ஆசிரியை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில், பிராந்திய ஊடகத்துறையில் நீண்டகாலமாக சேவையாற்றி வருவதுடன் அண்மையில் உபாலி விஜேவர்தன சிறப்பு தேசிய விருது பெற்ற ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# சாய்ந்தமருதில் நோன்பை முன்னிட்டு உணவகங்களில் விசேட பரிசோதனை

(நூருல் ஹுதா உமர்)

புனித நோன்பை முன்னிட்டு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட அல்-ஹிலால் வீதியில் அமைந்துள்ள உணவகங்கள் இன்று சுகாதாரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தப் பரிசோதனை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமையிலும், பொது சுகாதார பரிசோதகர்களின் பங்குபற்றலுடனும் மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனையின்போது உணவகங்களில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் உடனடியாக சுட்டிக்காட்டப்பட்டது. அவை உடனடியாகத் திருத்தவும்பட்டன.

வாழைக் குலைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஒரு களஞ்சிய அறை மிக மோசமான சுகாதாரச் சீர்கேடான நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது. இதனையடுத்து அங்கிருந்த வாழைக்குலைகள்



கைப்பற்றப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

புனித நோன்பை முன்னிட்டு பொது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான உணவுகளை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் இவ்வாறான திடீர் பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.



# பங்களதேஷ் தேர்தல் கண்காணிப்பில் இணைந்த இலங்கைப் பிரதிநிதிகள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான ஆசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் வலையமைப்பின் (Anfrel) அழைப்பின் பேரில், பங்களாதேஷில் நடைபெற்ற பொதுத் தேர்தல் மற்றும் அபிப்பிராய வாக்கெடுப்புகளின் கண்காணிப்புப் பணிக்காக இலங்கையில் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் பல முக்கிய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். Anfrel அமைப்பின் தவிசாளரும் பவ்ரல் (Pafferel) அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளருமான ரோஹண ஹெட்டியாரச்சியின் அழைப்பின் பேரில். ஐசநளள அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மானஸ் மக்கீன், Anfrel அமைப்பின் முன்னாள் நிறைவேற்ற பணிப்பாளர் சாந்தனி வட்டவல, சட்டத்தரணி ஜயந்த தெஹியத்தேகே ஆகியோர் இணைந்து கொண்டனர்.

Anfrel அமைப்பின் பங்காளதேஷ் தேர்தலுக்கான பணி இணைப்பாளர் தரிந்து அபேரத்ன மற்றும் பங்களா தேஷ் தேர்தலுக்கான தேர்தல் ஆய்வாளர் அசங்க சேனாதீர ஆகியோரும் இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

# சிறுவருக்குப் போசாக்கு உணவு வழங்கும் திட்டம் கற்பிட்டியில்!




(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி செடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு சமய சமூக நடுநிலை (சீ.எஸ்.ஆர்) மையத்தின் நிதி பங்களிப்பின் கீழ் தில்லையூர் மீனவ சங்கத்தின் தலைவர் எம்.சபறுல்லாஹ்வின் வேண்டுகோளின் பெயரில் கற்பிட்டி பிரதேசத்தில் 10வயதுக்குஉட்பட்டபோசாக்குக்குறைந்த சிறுவர்களுக்கு போசனை உணவு வழங்கும் திட்டம் நேற்று சனிக்கிழமை கற்பிட்டி தில்லையூர் ஜும்ஆ பள்ளிவாசலின் மேற்பார்வையில் உள்ள மீனவ சங்கத்தின் கட்டிடத்தில் செடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.ஆர். முனாஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில்சமயசமூகநடுநிலைமையத்தின் தேசிய அமைப்பாளர் பீ.மிலான் பெரேரா, தேசிய இணைப்பாளர் சமிர பெரேரா, தில்லையூர் பாடசாலையின் அதிபர் எஸ். எம். அரூஸ், தில்லையூர் ஜும்ஆ பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.டி. றிப்கான் (றஹ்மானி) , பள்ளிவாசலின் தலைவர் எம். அன்வர்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலைக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் தளபாடங்கள்

வவுனியா பகுதியை சேர்ந்த கணேசபுரம் ஸ்ரீசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலைக்கு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்காக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டன.

இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.45 மணியளவில் இந்த அறநெறி பாடசாலையில் நிகழ்வு இடம்பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்.







# சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு அடிக்கல் நட்டுவைக்கும் நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம், வடமராட்சி வடக்கு சுப்பர் மடம் கடற்றொழிளாளர் கூட்டுறவு சங்கத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை சங்கத் தலைவர் மு.சிவ குமார் தலைமையில் சுப்பர் மடத்தில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர் கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப் பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சுப்பர்மடம் ஸ்ரீமுனீஸ்வரர் ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சோ.துஸ்யந்த குருக்களின் ஆசியுடன், சிறப்பு வழிபாடு களுடன் முதல் அடிக்கல்லை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கிருஸ்ணன் அகிலன், வடமராட்சி வடக்கு, பிரதேச செயலாளர் நடராசா திருலிங்கநாதன், பருத்தித் துறை கிழக்கு கடற்றொழில் பரிசோதகர், மரியதாஸ் நாகேந்திரன், பருத்தித்துறை நகரபிதா விசன்ட் டீ போல் டக்ளஸ் போல் உட்பட பலரும் நட்டு வைத்தனர்.

இந்நிகழ்வில் சுப்பர்மடம் கிராம மக்கள், கடற்றொழிலாளர்கள், என பல ரும் கலந்துகொண்டிருந்தனர்.





## நேபாளத்தை வீழ்த்திய மேற்கிந்தியத்தீவுகள்
## இரண்டாவது அணியாக ‘சுப்பர்-8’இற்குள்
# நுழைந்தது




வான்கடேயில் இன்று மதியம் நடந்த நேபாளத்துக்கு எதிரான போட்டியில் வென்றதன் மூலம் இரண்டாவது அணியாக மேற்கிந்தித் தீவுகள் அணி ‘சுப்பர் -8’ சுற்றுக்கு முன்னேறியது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்திவருகின்றன.

இதில் இன்று மதியம் நடைபெற்ற 25ஆவது லீக் போட்டியில் நேபாளம் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய நேபாளம் அணி, 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களைச் சேர்த்தது.

மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பந்துவீச்சில் ஜேசன் ஹோல்டர் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்ற, அகீல் ஹொஸைன், மத்யூ போர்ட், ஷமர் ஜோசப் மற்றும் ரோஸ்டன் சேஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பின்னர் 134 எனும் இலகுவான இலக்கைத் துரத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணி, தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தொடக்க வீரர் பிரான்டன் கிங் 22 ஓட்டங்களுடன் (4 பௌண்டரிகள்) ஆட்டமிழந்து வெளியேறினார். இவருடன் களமிறங்கிய அணித்தலைவர் ஷாய் ஹோப் 44 பந்துகளில் 61 ஓட்டங்கள் (5 பௌண்டரிகள், 3 சிக்ஸர்கள்), ஷிம்ரன் ஹெட்மையர் 32 பந்துகளில் 46 ஓட்டங்கள் (4 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள்) விளாசினர்.

இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 15.2 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேபாளம் சார்பாக பந்துவீச்சில் நந்தன் யாதவ் மாத்திரம் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பந்துவீச்சில் ஜேசன் ஹோல்டர் தெரிவானார்.

இன்றைய போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் குழு ‘சி’ யிலிருந்து மேற்கிந்தியத் தீவுகள் அணி ‘சுப்பர் 8’ சுற்றுக்கு முன்னேறியது.

இதற்கிடையே நேற்று நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியிலும் வென்றதன் மூலம் குழு ‘டி’ யிலிருந்து மூன்று வெற்றிகளுடன் தென்னாபிரிக்கா சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கொழும்பில் இன்று இரவு பெருஞ்சமர்




## இந்திய-பாகிஸ்தான் வீரர்கள் கை குலுக்குவார்களா?

கொழும்பில் இன்று இரவு 7 மணிக்கு இந்தியா – பாகிஸ்தான் இடையே 'ரி-20' பெருஞ்சமர் வெடிக்கவுள்ளது.

அதேவேளை, ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவுடன் விளையாட மாட்டோம் என அடம்பிடித்த பாகிஸ்தான் அணி, தற்போது விளையாட முன்வந்துள்ள நிலையில், இன்றைய போட்டியின்போது இந்திய – பாகிஸ்தான் வீரர்கள் ஒருவருடன் ஒருவர் கை குலுக்குவார்களா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது.

இந்தப் போட்டி குறித்து இந்தியா, பாகிஸ்தான் அணிகளின் முன்னாள் வீரர்கள், இந்திய அரசியல் தலைவர்கள் எனப் பலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

மேலும், இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையில் உள்ள அரசியல் பிரச்சனைகள் காரணமாக முன்னர் இந்திய அணி வீரர்கள், பாகிஸ்தான் வீரர்களுடன் கை குலுக்க மறுத்தனர். இந்த விவகாரத்திற்கு பலரும் ஆதரவு மற்றும் எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

இதனால், இன்றைய இந்தியா – பாகிஸ்தான் போட்டியில் இரு அணி வீரர்கள் கை குலுக்குவார்களா என்ற கேள்விக்கு இதுவரை கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்நிலையில், இந்தியா – பாகிஸ்தான் அணிகள் இன்றைய போட்டியின் போது கை குலுக்குவது பற்றி இந்திய அணியின் முன்னாள் வீரர் சஞ்சய் மஞ்ரேக்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில்,

"கை குலுக்கக் கூடாது" என்பது இந்தியா தொடங்கி வைத்த ஒரு சிறுபிள்ளைத்தனமான விடயம். இது நம்மைப் போன்ற ஒரு நாட்டிற்குத் தகுதியற்றது. விளையாட்டின் உணர்விற்குள் சரியாக விளையாடுங்கள் அல்லது விளையாடவே வேண்டாம்," எனக் குறிப்பிட்டுள்ளார்.



# பாகிஸ்தான் எல்லையில் போத்தல்களை இந்தியா தொங்கவிடக் காரணம் என்ன?



பாகிஸ்தான் எல்லையில் இந்தியா காலி போத்தல்களைத் தொங்கவிட்டுள்ளது.

இந்தியா தனது நில எல்லைகளைச் சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட 7 நாடுகளுடன் பகிர்ந்து வருகிறது.

இந்த எல்லை பகுதிகளில், எல்லைப் பாதுகாப்புப் படை, சாஸ்திர சீமா பால், இந்தோ – திபெத்திய எல்லை காவல் படை, அசாம் ரைபிள்ஸ் மற்றும் இந்திய இராணுவம் ஆகியவை கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தியா தனது முக்கிய எதிரி நாடான பாகிஸ்தானுடன் 3,320 கிலோ மீட்டர் தூரம் எல்லையை பகிர்ந்து வருகிறது.

இவ்வளவு நீண்ட எல்லையை வீரர்கள் மட்டும் 24 மணி நேரமும் ரோந்து வர முடியாது.

அதே போல், இவ்வளவு தூரத்துக்கு வெப்ப சென்சார் அல்லது கண்காணிப்பு கேமரா அமைப்பது பாரிய செலவை ஏற்படுத்தும். அவ்வாறு அமைத்தாலும் கூட கன மழை, பனிப்பொழிவு, மின்வெட்டு காரணமாக மின்னணு சாதனங்கள் செயலிழக்கக்கூடும். அடர்த்தியான மூடுபனி இருக்கும் போது, அதிநவீன கமராக்களால் கூட ஊடுருவும் நபர்களைக் கண்டறிய முடியாது.

இதற்கு மாற்றாக குறைந்த விலையில் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாட்டை இந்தியா உருவாகியுள்ளது. எல்லை பகுதியில், உள்ள வேலிகளில் காலியான கண்ணாடி போத்தல்களை நெருக்கமாக கட்டி தொங்கவிட்டுள்ளனர்.

எதிரி நாட்டினர் அல்லது வன விலங்குகள் எல்லையை தொடும் போது, கம்பிகள் நகர்ந்து, இந்த பாட்டில்கள் ஒன்றோடு ஒன்று மோதி நீண்ட தூரத்துக்குச் சத்தம் எழுப்பும்.

எல்லையில் பாதுகாப்பு பணியில் உள்ள வீரர்கள் இந்தச் சத்தத்தைக் கேட்டதும் உடனடியாக நவடிக்கை மேற்கொள்வர். இதற்கு மின்சாரமோ பேட்டரியோ தேவை இல்லை. மழை, பனி, வெயில் போன்ற எந்த காலநிலையில் பாதிப்பை ஏற்படுத்தாது. இது அவர்களது முயற்சி.

# சாலை ரயில் சுரங்கப் பாதைத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது



இந்தியாவின் நீருக்கடியில் முதல் சாலை ரயில் சுரங்கப் பாதை திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தச் சாலை – ரயில் சுரங்கப் பாதைத் திட்டமானது உலக அளவில் இரண்டாவது சுரங்கப் பாதையாக அமையவுள்ளது.

முதலாவதாக இந்த சாலை ரயில் சுரங்கப் பாதைத் திட்டம் ஐரோப்பாவில் அமைந்துள்ளது.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாக, ஒரே சுரங்கப் பாதையில் ரயில் பாதையும், தரைவழி வாகனங்களின் பாதையும் அமையவுள்ளது.

இந்த சுரங்கப்பாதை திட்டமானது 18,662 கோடி ரூபா செலவில் அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா ஆற்றின் அடியில் 15.79 கிலோ மீற்றர் தூரத்துக்கு உருவாக்கப்படவுள்ளது.

இந்தப் பாதையானது கோப்பூர் மற்றும் நுமாலிகரை பகுதிகளை இணைக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 6 மணி நேரப் பயணமானது வெறும் 20 நிமிடங்களாக குறைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கக் கடலில் இரண்டு நாள்களில் காற்றழுத்த தாழ்வு உருவாக வாய்ப்பு

வங்கக் கடலில் இரு நாள்களில் காற்றழுத்த தாழ்வு உருவாகக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இது தொடர்பில் வானிலை மையம் கூறுகையில்,

பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்குப் பகுதிகள் மற்றும் தென் கிழக்கு வங்கக் கடலின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி தெற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் இரு நாள்களில் உருவாகக்கூடும்.

அதேநேரத்தில், கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, பெப்ரவரி 18ஆம் திகதி வரை தமிழ்நாட்டில் வறண்ட வானிலையே நிலவக்கூடும்.

19 மற்றும் 20 ஆம் திகதிகளில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் எனவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான பனிமூட்டம் காணப்படும் எனவும் வானிலை மையம் கூறியுள்ளது.

# ஏலியன்கள் இருப்பது உண்மையே ஒபாமா திட்டவட்டமாகத் தெரிவிப்பு

ஏலியன்கள் அல்லது வேற்றுக் கிரகவாசிகள் இருப்பது உண்மை என்று பராக் ஒபாமா அறிவித்துள்ளார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், அமெரிக்காவில் உள்ள ஏரியா 51 இல் வேற்று கிரகவாசிகள் மறைந்திருக்கிறார்கள் என்ற நீண்டகால சதி கோட்பாடுகளை அவர் உறுதியாக நிராகரித்துள்ளார்.

ஒபாமாவின் இந்த வெளிப்படையான பேச்சு, அமெரிக்காவின் மிகவும் நீடித்த மர்மங்களில் ஒன்றைப் பற்றி ஜனாதிபதிகள் என்ன அறிந்திருக்கக்கூடும் என்பதற்கான ஒரு அரிய பார்வையை வழங்கியுள்ளது.

சமீபத்திய நேர்காணல் ஒன்றில், ஏலியன்கள் இருப்பது உண்மையா என்ற நேரடியான கேள்விக்கே ஒபாமா பதிலளித்துள்ளார். ஏலியன்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட நேரடியான கேள்விக்கு, ஆம் உண்மையே என ஒபாமா பதிலளித்துள்ளார்.

ஆனால், தாம் அவற்றைப் பார்த்ததில்லை என்றும் ஒபாமா குறிப்பிட்டுள்ளார். நெவாடாவில் உள்ள ரகசிய அமெரிக்க இராணுவ தளமான ஏரியா 51 ஐச் சுற்றியுள்ள ஊகங்களை உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் அவரது பதில்கள் அமைந்துள்ளது.

இது நீண்ட காலமாக வேற்று கிரகவாசிகள் தொடர்பில் சதி கோட்பாடுகளின் மையமாக இருந்து வருகிறது. ஏரியா 51 இல் ஏலியன்கள் இல்லை என்பதையும் உறுதி செய்த ஒபாமா, அதை அமெரிக்க ஜனாதிபதியிடமிருந்து மறைத்திருந்தால் தவிர, ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அரசு இரகசியமாக வேற்றுக் கிரகவாசிகளின் உயிரினங்களைப் பாதுகாப்பாகத் தங்கவைத்து வருகிறது என்று கூறப்படுவதை ஒபாமாவின் இந்த கூற்று தெளிவாக நிராகரித்துள்ளது.

ஏரியா 51 பல தசாப்தங்களாக அமெரிக்க மக்களின் ஊகங்களுக்கு எரியூட்டி வருகிறது, குறிப்பாக பனிப்போர் காலத்திலிருந்து, அது அமைந்துள்ள பாலைவனம் போன்ற இருப்பிடம் மற்றும் வகைப்படுத்தப்பட்ட செயல்பாடுகள் அதை யுஎஃப்ஒக்கள் மற்றும் வேற்று கிரகவாசிகள் பற்றிய வதந்திகளுக்கு இயற்கையான இலக்காக மாற்றியது.




அமெரிக்க அரசாங்கம் இந்த ஏரியா 51 செயற்பாட்டில் இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளது, ஆனால் அது மேம்பட்ட இராணுவ விமானங்களை சோதிக்கப் பயன்படுத்தப்படுகிறது என்று தொடர்ந்து கூறி வருகிறது.

ஒபாமா மேலும் கூறுகையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பதவிக்கு மீண்டும் வருவது தனது திருமணத்தை இழக்க நேரிடும் என்று பலமான சிரிப்புடன் முன்னாள் ஜனாதிபதி ஒப்புக்கொண்டதுடன், எப்போதாவது அரசியல் மறுபிரவேசம் செய்ய முயன்றால் அவரது மனைவி மிஷேல் அவரை விட்டு விலகுவார் என்று கிண்டலுடன் பதிவு செய்தார்.

முயற்சி செய்தால் அரசுப்பணிக்கு தம்மால் திரும்ப முடியும் என்றும், ஆனால் அப்படி மீண்டும் அரசியலுக்கு திரும்ப தாம் விரும்பவில்லை என்றும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இல்லினாய்ஸ் மாகாண செனட்டராக இருந்து நாட்டின் ஜனாதிபதியாக தொடர்ச்சியாக பதவியேற்றபோது மிஷேல் செய்த தியாகங்கள் தொடர்பில் ஒபாமா நீண்ட காலமாக ஒப்புக்கொண்டு வருகிறார்.

தங்கள் குடும்பத்தின் மீது அரசியல் வாழ்க்கை ஏற்படுத்தும் அழுத்தத்தைப் பற்றி மிஷெலும் பலமுறை பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலியாவின் பாதுகாப்புத் திட்டம் புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் தளம்

## 3.9 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு

ஆஸ்திரேலியாவில் 3.9 பில்லியன் டொலர் மதிப்பிலான பிரம்மாண்ட கப்பல் தளம்கட்டும்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய பாதுகாப்பு திறனை மேம்படுத்தும் விதமாக அடிலெய்ட் நகரின் ஆஸ்போர்ன் புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் தளம் உருவாக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3.9 பில்லியன் ஆஸ்திரேலிய டொலர் மதிப்பிலான இந்த யுருமுருளு (அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா) திட்டம் தொடர்பான அறிவிப்பை ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் வெளியிட்டுள்ளார்.

இந்தத் திட்டம் ஆஸ்திரேலிய நாட்டின் பாதுகாப்பில் ஒரு அடிப்படைத் தூண் என்று அந்தோணி அல்பானீஸ் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அமெரிக்கா, பிரித்தானியா




உடனான நீண்ட கால உறுதிமொழிகளை நிறைவேற்றவும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இது அவசியமானது எனவும் அல்பானீஸ் குறிப்பிட்டுள்ளார்.

அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் தளம் இந்தோ பசிபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது தொடர்பான முக்கிய நகர்வாக பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 15/02/2026

**முதல்வரின் அழைப்பில் பிரதமர் கார்னி பங்கேற்பு**

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொள்ளும்படி நகர முதல்வர் விடுத்த அழைப்பின் பேரில் பிரதமர் Mark Carney வெள்ளியன்று 02▶



# கனடிய அரசியல் தலைவர்களை ஒன்றிணைத்த சூட்டுச் சம்பவம்!

கடந்த வாரத்தின் கோரமான துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, மத்திய மற்றும் மாகாணத் தலைவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை British Columbia வின் Tumbler Ridge பெருந்திரளான மக்களுடன் கலந்துகொண்டனர்.

பிரதமர் Mark Carney, Conservative கட்சித் தலைவர் Pierre Poilievre, Bloc Québécois கட்சித் தலைவர் Yves-François Blanchet, NDP இடைக்காலத் தலைவர் Don Davies மற்றும் பசுமைக் கட்சித் தலைவர் Elizabeth May ஆகியோர் இணைந்து நின்று, நிலைகுலைந்து போயுள்ள அந்தச் சமூகத்திற்குத் தங்களின் ஒரு மித்த ஆதரவை வெளிப்படுத்தினர். 02▶

# கனடா வழியாக ஆள்களை அமெரிக்காவுக்கு கடத்தினார்கள் என இருவர் மீது குற்றச்சாட்டு

அமெரிக்க - கனடா எல்லை வழியாக வெளிநாட்டினரை அமெரிக்காவிற்குள் கடத்திச் செல்ல சதி செய்தனர் என டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த ஒருவரும் அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

மெக்ஸிக்கோ மற்றும் மத்திய மற்றும் தென் அமெரிக்காவிலிருந்து மக்களை அமெரிக்காவிற்குள் கடத்திச் செல்ல 27 வயதான Francisco Antonio Luna Rosado மற்றும் 37 வயதான Jesus Hernandez Ortiz ஆகியோர் திட்டமிட்டனர் என அமெரிக்க நீதித்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அமெரிக்காவிற்கு சட்டவிரோதமாக நபர்களை அழைத்து வரும் நோக்கில் சதி செய்தனர் என ஒரு குற்றச்சாட்டும், தனிப்பட்ட நிதி ஆதாயத்திற்காக 12 முறை சட்டவிரோதமாக நாட்டிற்குள் மனிதர்களை அழைத்து வந்தனர் எனவும் 12 குற்றச்சாட்டுகள் இவர்கள் இருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

மேலும், மனிதக் கடத்தல் தொடர்பான பணமோசடி செய்தார் என Luna Rosado மீது கூடுதலாக இரண்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அமெரிக்க நீதித்துறை வெளியிட்டுள்ள தகவலின்படி, Luna Rosado குறைந்தது August 2022 முதல் March 2024 வரை இந்த கடத்தல் 02▶

# கனடாவில் தீயில் பலியான தமிழ் யுவதி

கனடா, ஒன்ராறியோவில் உள்ள Loyalist Township பகுதியில் லக்ஷா எனும் இளம் பெண் தன் வீட்டில் ஏற்பட்ட தீயில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் கடந்த ஜனவரி 29ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

பிரமிளாவின் மகள் லக்ஷா தனது அம்மாவுக்கு மொபைல் மூலம் அழைப்பு அனுப்பி, "அம்மா, நம் வீட்டில் தீப்பற்றி எரிகிறது, கதவையும் தீ சூழ்ந்துள்ளதால், வெளியே வர முடியவில்லை. என்னைக் காப்பாற்றுங்கள்" என பயமுடன் கதறி உள்ளார்.

பிரமிளா, மொபைலில் மகளின் பயங்கர அழைப்பைக் கேட்டதும், உடனே காரில் வீட்டிற்கு சென்று, தீ சூழ்ந்த வீட்டை காணும் போது, மகள் உயிரிழந்து கிடந்ததை மட்டுமே கண்டுள்ளார்.

பிரமிளாவின் மகனான கயா கூறியதாவது, "அவளின் கடைசி வார்த்தைகளை நினைத்து நாங்கள் இன்னும் கண்ணீர் வடிக்கின்றோம்" என்கிறார்.

வீட்டில் தீ எப்படி பற்றியது, சம்பவத்திற்கு காரணம் என்ன என்பதற்கான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

குடும்பத்தினர் இளம்பெண்ணை இழந்த துயரத்தில், அவரது கடைசி வார்த்தைகளை நினைத்து தினமும் கண்ணீர் வடித்து வருகிறார்கள்.

இச் சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## முதல்வரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

British Columbia வின் Tumbler Ridge பகுதிக்குச் சென்றார்.

ஏனைய அனைத்து மத்திய அரசாங்க கட்சித் தலைவர்களையும் தன்னுடன் இணையுமாறு அவர் அழைப்பு விடுத்திருந்தார் என்வும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நடந்த இந்தத் துப்பாக்கிச் சூட்டில் குழந்தைகள் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டிருந்தனர். இதில் 18 வயதான துப்பாக்கிதாரி Jesse Van Rootselaar தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர்களில் Tumbler Ridge உயர்தரப் பாசாலையை சேர்ந்த ஐந்து மாணவர்கள் மற்றும் ஓர் ஆசிரியர் அடங்குவர். மேலும், துப்பாக்கிதாரி Van Rootselaar உடன் ஒரே வீட்டில் வசித்து வந்த அவரது தாய் மற்றும் சகோதரரும் கொல்லப்பட்டுள்ளனர்.

British Columbia வின் முதல்வர் David Eby மற்றும் மத்தியரசாங்க பொது பாதுகாப்பு அமைச்சர் Gary Anandasangaree ஆகியோர் தற்போது சுமார் 2,700 மக்கள் வசிக்கும் அந்த சிறிய வடக்கு நகரத்தில் தங்கி இன்று இறுதி நிகழ்வு ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில் Maya Gebala என்ற 12 வயது சிறுமி, மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றா என முதல்வர் Eby தெரிவித்துள்ளார்.

## கனடா வழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக் கைகளை முன்னின்று நடத்தியுள்ளார்.

கடத்தப்பட்ட நபர்கள் விமானம் மூலம் கனடாவிற்கு வந்தடைந்தனர் எனவும், அதன் பின்னர் Luna Rosado தொலைபேசியைப் பயன்படுத்தி அவர்களை வடக்கு Vermont பகுதிக்கு வழிநடத்தியனார் என்வும் கூறப்படுகிறது. அங்கிருந்து அவர்கள் வாகனங்கள் மூலம் New York City நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

## கனடிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு கருத்து வெளியிட்ட பிரதமர்,"உங்கள் வீட்டில் நாம் ஒன்றாக இணைந்து நின்றிருக்கும் இந்த வேளையில், கனடா நாட்டு மக்கள் உங்களுடன் இருக்கிறார்கள் என்பதையும், நாங்கள் எப்போதும் உங்களுடனேயே இருப்போம் என்பதையும் நீங்கள் உணர வேண்டும் என நாங்கள் விரும்பினோம்."

- என்று கூறினார்.

அத்துடன் துப்பாக்கிச் சூடு நடந்த இரண்டு நிமிடங்களுக்குள் விரைந்து வந்து உதவிய RCMP அதிகாரிகளுக்கும், அந்தத் துயரம் நிகழ்ந்த வேளையில் ஒருவரையொருவர் பாதுகாக்க முயன்ற ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பிரதமர் Carney தனது நன்றியைத் தெரி வித்தார்.

துப்பாக்கிச் சூடு தொடர்பாக நான்கு துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமையை RCMP தற்போது உறுதிப்படுத்தியுள்ளது. இதில் இரண்டு துப்பாக்கிகள் இல்லத்திலும், ஏனைய இரண்டு பாடசாலையிலும் கண்டெடுக்கப்பட்டன.

அதிகாரிகள் இதற்கு முன்னரும் அந்த வீட்டிலிருந்து துப்பாக்கிகளைக் கைப்பற்றியிருந்தனர். ஆனால் பின்னர் அந்த ஆயுதங்கள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த் வாரத் துப்பாக்கிச் சூட்டில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள், ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டுத் திரும்ப ஒப்படைக்கப்பட்டவையா என்பது குறித்து RCMP இதுவரை உறுதிப்படுத்தவில்லை.



# இந்திய ரயிலில் பயணித்த கனேடியர்கள் இருவர் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பட்டறிவுப் பகிர்வு!

இந்தியாவுக்கு சுற்றுலா சென்ற இரண்டு கனேடியர்களுக்கு வித்தியாசமான அனுபவம் ஒன்று கிடைத்தது.

கிம் கிரீன்வுட் என்னும் கனேடிய பெண்ணும் அவருடன் மற்றொரு கனேடியரும் இந்தியாவுக்கு சுற்றுலா சென்றுள்ளார்கள்.

அவர்கள், ரயில் ஒன்றில் தூங்கும் வசதி கொண்ட இருக்கைகளை முன் பதிவு செய்த நிலையில், ஒரு ரயில் நிலையத்தில் ரயில் நிற்க, திபுதிபுவென சில சிறுவர்கள் ரயிலில் ஏறியுள்ளார்கள்.

அந்தச் சம்பவம் குறித்து சமூக ஊடகம் ஒன்றில் பகிர்ந்துகொண்டுள்ள கிம், அதற்குப் பிறகுதான், இந்தியாவில் ரயிலில் தூங்கும் வசதி கொண்ட இருக்கை முன்பதிவு செய்தாலும், அது இரவில் தூங்குவதற்கு மட்டுமே, பகலில் மற்றவர்களுடன் இருக்கையை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தனக்குப் புரிந்தது என்கிறார்.

என்றாலும், பிள்ளைகளைக் கண்டதும் எரிச்சலடையாமல், அவர்களுடன் விளையாடிக்கொண்டு ஜாலியாக பயணித்துள்ளார்கள் இருவரும்.

அத்துடன், சிலர் தங்கள் வீட்டில் தயாரித்த உணவைக் கொடுத்தனர் என்ச்வும் தெரிவிக்கிறார் கிம்.

ஒரு நிமிடம்கூட தங்களால் தூங்க முடியவில்லை என்பது உண்மைதான் என்றாலும், பிள்ளைகளுடன் ஜாலியாக விளையாடிக்கொண்டு பயணித்தமை ஒரு வித்தியாசமான அனுபவமாக அமைந்தது என்கிறார் அவர்.

அவரது செய்தியைப் படித்த பலரும், பொதுவாக இதுபோல் பிள்ளைகள் வந்து விளையாடிக் கொண்டிருந்தால் அதை தொல்லையாக எடுத்துக் கொள்பவர்கள் உண்டு. ஆனால், நீங்கள் அதை விளையாட்டாக எடுத்துக்கொண்டதற்கு பாராட்டுக்கள் என்னும் ரீதியில் கருத்துக்களை தெரிவித்துவருகிறார்கள்.

# அச்சுறுத்தலால் கனடாவை விட்டு வெளியேற திட்டமிட்டுள்ள இந்திய வம்சாவளிக் குடும்பம்

கனடாவின் பீல் பிராந்தியத்தில் வசிக்கும் இந்திய வம்சாவளிக் குடும்பம், தொடர்ச்சியான மிரட்டல்கள் மற்றும் துப்பாக்கிச்சூடு அச்சுறுத்தல்களால் அங்கு வாழ்வது பாதுகாப்பானதல்ல எனக் கருதி நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளது.

தர்ம்ஜித் என்ற இந்திய வம்சாவளி நபர், 2025 அக்டோபர் மாதம் முதல் அடையாளம் தெரியாத கும்பலிடமிருந்து பணம் கேட்டு மிரட்டல் அழைப்புகளைப் பெற்று வருகின்றார் எனத் தெரிவித்துள்ளார். அவர் பொலிஸில் புகார் அளித்தபோதும், அழைப்புகள் தொடர்ந்து வந்துள்ளன.

2025 நவம்பர் 25 அன்று அவரது பண்ணை வீட்டில் துப்பாக்கிச் சூடு நடந்தது. பொலிசார், அந்த வீட்டில் தங்க வேண்டாம் என அறிவுறுத்தினர்.

ஆனால், அவர்கள் மீண்டும் அங்கு திரும்பியபோது மீண்டும் துப்பாக்கிச் சூடு நடந்தது.

தர்ம்ஜித் கூறியதாவது: “பொலிசால் எங்களை பாதுகாக்க முடியவில்லை. எப்போதும் புதிய எண்களில் இருந்து மிரட்டல் அழைப்புகள் வந்துகொண்டே இருந்தன. வீட்டை விட்டு வெளியேறுங்கள் என்ற ஆலோசனை மட்டுமே கிடைத்தது. அதனால், இங்கு புதிய வீடு வாங்குவதற்குப் பதிலாக, நாட்டை விட்டு வெளியேறுவதே சிறந்தது என முடிவு செய்தோம்.” என்று கூறியுள்ளார்.



கனடாவில் இந்திய வம்சாவளி குடும்பங்களை குறிவைத்து நடைபெறும் கட்டாய வசூல் (Extortion) சம்பவங்களின் ஒரு பகுதியாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்தியரான லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலே இத்தகைய பணப்பறிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது.

கனடா அரசு, 'லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலை' தீவிரவாத அமைப்பு என பட்டியலிட்டுள்ளது. இந்த கும்பல், இலக்குகளைத் தேர்வு செய்து, பணம் கேட்டு, மறுத்தால் வீடுகள் அல்லது சொத்துகளில் துப்பாக்கிச் சூடு நடத்தி, அதன் வீடியோவை அனுப்பி மீண்டும் மிரட்டுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால், பீல் பிராந்திய பொலிஸ் அதிகாரிகள், இந்தச் சம்பவத்தில் லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலுக்கு தொடர்பு இருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.